பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம். பி.

மலர் : 16] சென்னை : ஆவணி 4 (19—8—68) திங்கள் ★ வெளியூர் : ஆவணி 5 (20—8—68) செவ்வாய் [இதழ் : 55

குறுகிய எண்ணத்துடன் செயல்படுகின்றனர்

'குழப்பம் நிலவ வேண்டும்' என்பதே அவர்களது குறிக்கோளாயிருக்கிறது

குறை கூறுவோர் அதற்குரிய காரணத்தைச் சொல்ல முடியாததற்குக் காரணம் என்ன?

'தொழில் துறையில் அமைதியில்லை' என்போருக்கு அமைச்சர் செ. மாதவன் கண்டனமும் எச்சரிக்கையும்

சென்னை, ஆக. 19—

"'தொழிற்சாலைகளில் அமைதியில்லை; தகராறுகள் நிலவுகின்றன' என்று குற்றஞ் சாட்டுகிறார்களே தவிர, ஆக்கபூர்வமான திட்டம் எதையும் தருவதில்லை! 'இதற்கெல்லாம ஆட்சிதான் காரணம்' என்கிறார்கள் ; இதிலிருந்தே அவர்கள் மீது சந்தேகம் ஏற்படுகிறது.

"உண்மையில் தொழிலாளர்களிடையே அமைதி ஏற்பட வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமல்ல ; 'குழப்பம் ஏற்பட வேண்டும் ; அந்தக் குட்டையிலே மீன்பிடிக்க வேண்டும்' என்ற குறுகிய மனப்பான்மைதான் இருக்கிறது; இதை நினைக்கும்போது வருத்தம்தான் ஏற்படுகிறது.

"'தகராறுக்கு அரசுதான் பொறுப்பு' என்று குறை கூறுபவர்களால் அதற்கான காரணத்தைச் சொல்ல முடிவதில்லை !

"தொழில்கள் வளர வளர -- தொழில் வாய்ப்புகள் பெருகப் பெருக -- தகராறுகள் அதிகமாகத்தான் செய்யும் ; 'தொழில் தகராறுகளே ஏற்படக்கூடாது' என்பது சரியல்ல ! தொழிலாளர்கள் நன்மை பெற தொழில் தகராறுகள் ஏற்படத்தான் செய்யும் ! இந்தத் தகராறுகளின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு அரசாங்கத்தின் மீது குறை கூறக்கூடாது.

"தொழிலாளர்கள் தங்களது உரிமைக் குரலை எங்களது ஆட்சிக் காலத்தில் தாராளமாகச் சொல்லுகிறார்களே என்பதற்காகப் பெருமைப்படவும் செய்கிறோம்.

"ஒரு தலைவர் என்னைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'இந்த அமைச்சருக்குத் தொழிலாளர் பிரச்சினையில் அனுபவமில்லை' என்று கூறியிருக்கிறார் ; ஒப்புக்கொள்ளுகிறேன் ; எனக்கு இந்தத் துறையிலே போதிய அனுபவமில்லாமலிருக்கலாம் ; ஒருவேளை இருந்திருந்தால் கெட்டுவிட்டிருக்கக்கூடும் ; இல்லாதிருப்பதால்தான் நடுநிலையோடு நின்று தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு என்னால் நல்ல முறையில் தீர்வு காண முடிகிறது"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், பின்னி ஊழியர் சங்க முதலாவது ஆண்டு விழாவில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார். மேலும அவர் பேசுகையில், தொழில தகராறுகள் தீர்க்கப்படுவதில் தாமதம் ஏற்படுவதற்கு அரசு மட்டும் பொறுப்பு இலலை என்றும், சில சமயங்களில் காலதாமதம் ஏற்படுவதால்தான் இருதரபபினரும் நெருங்கிவந்து சேருகிறார்கள் என்றும் உணர்த்தினார் ; 'குறைகளைக் களைய இந்த அரசு கிஞ்சிற்றும தயங்காது' என்றும் குறிப்பிட்டுவிடடு மேலும் அவர் விளக்கிக் கூறியதாவது :—

தொழிலாளர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் கட்டுப்கோப்பாக இருந்து ஆக்கம் பெறவேண்டும் என்று விரும்புகிறேன.

முதலாளியின் பக்கம் நாங்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள் ; ஆனால் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதில்தான நாங்கள் முன்னணியில் நிற்கிறோம்.

தொழிற் சங்கங்கள் அரசியல் கருத்துகளுக்கு ஆட்படாமல் தொழிலாளர்களின் நன்மையைக கருத்தில் கொண்டு பாடுபட வேண்டும்.

அரசியல் தலையீடுகள் ஏற்படுவதால் தொழிலாளர்களிடையே போராட்டம்--பூசல்--மோதல்களெல்லாம் ஏற்படுகின்றன ; ஆகவே, தொழிலாளர் அமைப்புகள் சுதந்தரமாக இயங்க வேண்டும்.

தொழிற் சங்கங்களை அரசியல் வாதுகளே ஏற்று நடத்தும் பாரம்பரியம் தொன்றுதொட்டு இருந்து வருவதால், அதை மாற்றுவது கடினமதான் ; எனினும, சுதநதர உணாச்சி, சங்கங்களில் மேலோங்க வேண்டும்.

தொழிற்கொள்கையில் இந்த அரசு மிகத் தெளிவாக இயங்கி வருகிறது. இநத அரசு தி. மு. கழகததைச் சாாந்ததெனினும், கட்சி சாா்பில் எந்தத் தொழிற் சங்கததையும் ஆதரிக்கவில்லை ; கட்சியிலுளளவர்கள் தொழிற் சங்கத்தில் ஈடுபட்டு நடததுகிறார்கள் ; கட்சி சார்பறற முறையில் தொழிற்சங்கங்களை நடத்தி வருகிறார்கள்.

சமுதாய நன்மையையே நோக்கமாகக் கொண்டு தொழிற்சங்கங்கள் இயங்க வேண்டும் என்றுதான் நாங்கள் கருதுகிறோம்.

தொழிலாளர்களின் பிரச்சினைகளில் கவலையோடு கவனம் செலுத்தி, அவர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவதில் அரசு அக்கறை காட்டுகிறது.

"உழைக்கின்ற தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் ; அவர்கள் வளமற்றவர்களாக இருக்கிறார்கள்" என்பதனை உணர்ந்திருக்கின்ற காரணத்தினால்தான் அரசு, தொழிலாளர்களின் பக்கம் நின்று அவர்களின் உரிமைகளைப் பெற்றுத் தர விரும்புகிறது.

எந்தத் தொழிற் சங்கத் தகராறு ஏற்பட்டாலும் அரசின் தலையீடோ, அடக்குமுறையோ இருக்காது என்பதற்கு உறுதி தருகிறேன் ; அதே நேரத்தில் 'சட்டத்திற்கு உட்பட்டுத்தான் எதுவும் நடக்கும்' என்ற உறுதியை நீங்கள் எனக்குத் தாருங்கள்."

சோவியத் இரஷ்யா உதவாவிடில்...

வியன்னா, ஆக. 17—

உஸ்க பாங்கியிலிருந்தும், தனிப்பட்ட மேலை நாடுகளிலிருந்தும் பெரும் பணம் கடன் வாங்குவது பற்றி செக்கோஸ்லோவேகியா ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

கடனுதவி அளிக்குமாறு ஏற்கனவே சோவியத் இரஷ்யாவை செக்கோஸ்லோவேகியா கேட்டுக்கொண்டிருக்கிறது ; இந்த வேண்டுகோளை சோவியத்அரசு ஏற்காவிடில் மேலை நாடுகளிடம் செக். அரசு கடன் கேட்கக் கூடும்.

அன்றும் எதிர்த்தோம்-- இன்றும் எதிர்க்கிறோம் !

"அமைதியான முறையில் போராட்டம் நடத்தப்பட்டு—சனநாயகத்திற்கும் சட்டுப்பாட்டுக்கும் உட்பட்டுப் போராட்டம் நடத்தப்பட்டு — அதன்மீது அடக்குமுறை பயன்படுத்தப்படுமானால், எவரும் குற்றஞ்சாட்டலாம்.

"அடக்குமுறையைத் தி.மு. கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோதும் எதிர்த்தது--ஆளுங்கட்சியாக இன்று இருக்கும்போதும் எதிர்க்கிறது !"

--அமைச்சர் செ. மாதவன்

(பின்னி ஊழியர் சங்க ஆண்டுவிழாவில்)

'எதையாவது செய்து' தியாகிகளாகிவிடத் திட்டமிடுவோர்!

தாராளமாகச் செய்யட்டும்----- தடை ஏதுமில்லை !

சென்னை, ஆக. 19—

"மக்களின் இதயத்தில் குடியிருக்கவேண்டுமானால், 'எதையாவது செய்து சிறைக்குப் போகவேண்டும்' என்று எதிர்க் கட்சியில் இருக்கின்ற பெருந் தலைவர்' ஒருவர் கருத்துத் தெரிவித்திருக்கின்றார் !

"அந்த முறையில் யாராவது 'தியாகிகள்' ஆகிவிடவேண்டும் என்று நினைத்தால், தாராளமாக அதனைச் செய்யட்டும் ; அதற்கு எவ்விதத் தடையும் இல்லை !"

---அமைச்சர் செ. மாதவன்

பின்னி ஊழியர்கள் சங்க ஆண்டுவிழாவில்)

டெல்லி ஆட்சியினர்மீது கிருபளானி கடுந் தாக்கு!

"கடந்த 20 ஆண்டுகளாக மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பிறகும் இப்போதைய மந்த நிலையில் நாம் ஏன் இருக்கிறோம் ? எல்லாப் பிரிவு மக்களிடமும் ஒருவிதமான மனக் குறையும் அதிருப்தியும் ஏமாற்றமும் நிலவுவதற்குக் காரணம என்ன ? நம் பொருளாதாரம் ஏன் ஒரு தேக்க நிலையிலிருக்கிறது ? வறுமை, வேலையில்லாமை ஆகிய பிரச்சினைகளை ஏன் நம்மால் திருப்திகரமாகத் தீர்க்க முடியவில்லை ?

"நம்மைக் கீழே தள்ளியிருப்பது விதியல்ல ; நாம் சில தவறுகளைச் செய்துவிடடோம் ; அவற்றைத் தவிர்த்திருக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

"நாம் செய்த மிகப் பெரிய தவறு, 'சுதந்தரம் பெற்றதுமே, நம் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிட்டன' என்று நினைத்துவிட்டதுதான் !

"அரசியல் விடுதலை என்பது, நாம் எல்லாத் துறைகளிலும் முன்னேறத் தடையாக இருப்பதைக் களைந்தெறியும் ஒன்றுதான் என்பதை நாம் உணரத் தவறிவிட்டோம் !

"இங்கு தொழில்களை ஆரம்பிக்க அந்நிய உதவியை நாடினோம் ; அதன் விளைவு---பணக்கார நாடுகளிலிருந்து ஏராளமாகக் கடன்களுக்கு வருடாந்திர வட்டியைக்கூடக் கொடுக்க இயலாத நிலையில் இருக்கிறோம் !

"இந்த நிலையில், நாம் விவசாயத்தைப் புறக்கணித்துவிட்டோம் ; அதன் விளைவாக, உணவுப் பொருள் இறக்குமதிக்காக ஏராளமாகச் செலவிட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டோம் !

"வைசிராய்களும், கவர்னர்களும் வசித்த பிரும்மாண்டமான அரண்மனைகளைப் பற்றியும், அவைகளுக்குச் செலவிடப்படும் பெருந்தொகை குறித்தும் நாம் எதிர்த்து வந்தோம் ; 'சுதந்தரம் கிடைத்ததும் இந்த அரண்மனைகள் ஏழைகளின் மருத்துவமனைகளாக மாற்றப்படும்' என்று காந்தியடிகள் சொன்னார்.

"மவுண்ட்பேட்டன் பிரபு, வைஸ்ராய் பதவியைவிட்டு இந்நாட்டின் கவர்னர்-ஜெனரலாக ஆனதும், புதிய அரசியல் அமைப்பின்படி தாம் எளிய வீட்டுக்குக் குடிபோவதாக நேருவிடம் சொன்னார். ஆனால் நேரு அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு பெரிய ராஜபரம்பரையைச் சேர்ந்த அவரது பெருந்தன்மை, இந்தியத் தலைவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகும் !

"எதேச்சாதிகார முத்திரையுடன் விளங்கும் அரண்மனைதான் இன்றைக்கு நமது குடியரசுத் தலைவரின் மாளிகையாக இருக்கிறது ! கவர்னர்கள் மாளிகைகளையும் நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம் ! இந்த அரண்மனைகள் பெரும்பாலான மக்களின் ஏழ்மை நிலையைப் பிரதிபலிக்கவில்லை !"

—('மெயில்' இதழின் சிறப்புக் கட்டுரையிலிருந்து)

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.
திருவள்ளுவராண்டு 1999 ஆவணி 4 (19—8—68) திங்கள்

சுதந்தரத் திருநாள்—முதல்வர் விருப்பம்

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து இந்தியத் துணைக் கண்டம் அரசியல் விடுதலை பெற்ற நாள்--ஆகஸ்டு பதினைந்து.

இந்த ஆகஸ்டு பதினைந்து, இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில் மட்டுமே இடம்பெற்றுள்ள நாளல்ல --- உலக வரலாற்றிலும் இடம்பெற்றிருக்கின்ற தனிப் பெரும் நாளாகும்.

தனது அரசியல் அடிமைத்தனத்தை உதறித் தள்ளிவிட்டு, உலகச் சுதந்தர நாடுகளின் பட்டியலில் தனது பெயரையும் இந்தியத் துணைக்கண்டம பொறித்துக்கொண்ட நாள்--ஆகஸ்டு பதினைந்து.

எனவே, ஆகஸ்டு பதினைந்து, இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் அரசியல் விடுதலையைத் தேடித்தந்த நன்னாளாகும்.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு பதினைந்தாம நாளுக்கு முன்பு வரையில், 'பிரிட்டிஷ் இந்தியக் குடிமக்கள்' என்ற அடிமை முத்திரையைப் பொறித்துக் கொண்டிருந்த இம்மண்ணில் பிறந்தவர் அனைவரும், ஆகஸ்டு பதினைந்தாம் நாள் நடு இரவுக்குப் பின்னர், 'இந்தியக் குடிமக்கள்' என்ற சுதந்தரப் பெயரைப் பெறுகின்ற பெரும் பேற்றினைப பெற்றனர்.

'இந்தியக் குடிமக்கள்' என்ற பெரும் பேற்றினைப் பெற, விடுதலை இயக்கமாகச செயல்பட்டுவந்த அன்றையக் காங்கிரசுக் கட்சி உலக உத்தமர் காந்தியடிகள் தலைமையில் இன்னல்கள் பலவற்றை ஏற்று அருமபெரும் தியாகங்களைச் செய்திருக்கின்றது.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் நாள் நடுநிசிக்கு முன்புவரை 'பிரிட்டிஷ் இந்தியக் குடிமக்கள்' என அழைககப்படடுவந்தவர்கள், நடுநிசிக்குப் பின்னர் 'இந்தியக் குடிமக்கள்' எனச் சிறப்பித்து அழைககப்படுகின்ற உயர் நிலையை எய்தியதைப் போன்றே, இப்புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த அரும்பாடுபட்டதுடன் அன்று இரவுக்கு முன்புவரை நாட்டின் விடுதலை இயக்கமாக விளங்கிய காங்கிரசுக் கட்சியும், 'விடுதலை இயக்கம்' என்ற தனிச் சிறப்பினை இழந்து, 'ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் செயல்படத்தக்கக் கூடிய ஒரு பெரிய அரசியல் கட்சி' என்ற பெயரினைப் பெற்றுவிட்டது.

நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டுக் கொண்டுவந்த---அனைவருக்கும் சொந்தமான விடுதலை இயக்கமாக விளங்கிவந்த காங்கிரசுக் கட்சி, அரசியல் துறையில் நாடு சுதந்தரம் பெற்றுவிட்ட பதினைந்தாம் நாளுக்குப் பின்னர், அக்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே சொந்தம் எனக் கொள்ளத்தக்க அரசியல் கட்சியாக நிலை மாற்றம் பெற்றுவிட்டது.

'அனைவருக்கும் பொதுவான விடுதலை இயக்கம்' என்ற நிலையிலிருந்து மக்களில் பெருந்தொகையினரைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, நாடடுக்குச் சுதந்தரம பெற்ற அன்றையக் காங்கிரசுக் கட்சியின் சாதனைக்கு, 'அரசியல் கட்சிகளில் ஒன்று' என்ற நிலையை எய்திவிட்ட பின்னரும்கூட, இன்றையக் காங்கிரசுக் கட்சி உரிமை கொண்டாடுவது பொருந்தாது; அது அரசியல் அறமும் ஆகாது.

ஆனால் இன்றையக் காங்கிரசுக் கட்சியோ—ஆகஸ்டு பதினைந்து சுதந்தர நாளை, அரசியல் கட்சிகள் அனைத்தும் உட்பட கட்சி வேற்றுமைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, மக்கள் அனைவரும் உறவு கலந்து 'விடுதலை' நாளாகக் கொண்டாடுவதை விரும்பவில்லை என்பதுடன், அவ்விடுதலை நாளைக் கொண்டாடுல் உரிமை தனக்கு மட்டுமேதான் உண்டு என்ற பாத்தியதையும் கொண்டாடி வருகிறது.

ஆகஸ்டு பதினைந்து விடுதலை நாளைக் கொண்டாடுவதில் இந்த இருபதாண்டுக்காலமாகக் காங்கிரசுக் கட்சி செயலாற்றி வந்துள்ள முறைக்கு மாருகவும், இந்த நாளைக் கொண்டாடுவதில் காங்கிரசுக் கட்சி கொண்டிருக்கின்ற மனப்போக்கிற்கு முழுவதும் மாருகவும், இன்றையத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இவ்விடுதலை நாளை, கட்சி வேற்றுமைகள் அனைத்தையும் மறந்து, மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இதயபூர்வமாகக் கொண்டாடி மகிழ்ந்திடத்தக்க இன்ப நாளாக--வாழ்விலோர் திருநாளாக--சுதந்தரப் பெருநாளாக--தேசிய விழா நாளாகக் கோண்டாட வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில்தான், சுதந்தர நாள் விழா குறித்து இவ்விழுமிய விருப்பத்தை, தமிழக முதல்வர் அண்ணா அவர்கள் வெளியிட்டிருக்கின்ருர் என்பதில்லை.

சென்ற ஆண்டில் நடைபெற்ற சுதந்தர நாள் விழாவின் போதும் இதே விருப்பத்தை --- 'முதலமைச்சர்' என்ற முறையில்--- அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டிருந்தார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் விருப்பமும் வேண்டுகோளும் நியாயமானது --- நேர்மையானது --- இதயத்திலிருந்து கிளம்பியிருப்பது.

அண்ணாவின் விருப்பப்படி, அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுகூடி, விடுதலை நாளைத் தேசியத் திருநாளாகக் கொண்டாடும் பட்சத்தில்---இக்கொண்டாட்டம் சில பல ஆண்டுக்காலம் தொடரும்பட்சத்தில்---இன்று பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களிடை பாம்புபோல் சீறிப் படமெடுத்தாடிக் கொண்டிருக்கும் பொருளற்ற பகை---அடிப்படை இல்லாத பூசல் சிறுகச் சிறுக---மெள்ள மெள்ள ---ஆனால் உறுதியாக மறைந்து, இறுதியில் மாய்ந்தொழிந்து போகும்.

அத்தகைய சூழ்நிலையில், நாகரிகமான ஆரோக்கிய அரசியல், நாட்டு மக்கள் அனைவருடைய உள்ளங்களிலும் உருப்பெற்று வலிவடைந்து செழுமையாக வளர்ந்தோங்கும்.

அரசியல் துறையில் இப்படி ஓர் உயர்ந்த நிலைக்கு மக்கள் அனைவரையும் உயர்த்திவிட வேண்டும் என்ற நல்லெண்ணம் காங்கிரசுத் தலைவர்களுக்கு அணுவளவாவது இருந்திடும்பட்சத்தில்—சென்ற ஆண்டு சுதந்தர நாள் விழாவில் முதலமைச்சர் விருப்பம் தெரிவித்ததை ஏற்றுக்கொண்டு, இந்த ஆண்டு விழாவை அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட தேசியத் திருநாளாகக் கொண்டாட விருப்பம் தெரிவித்திருப்பர்.

ஆனால் காங்கிரசுத் தலைவர்களோ, தங்கள் போக்கைக் கைவிடவும் விரும்பவில்லை; அப்போக்கிற்கு மேலும் உரமூட்டவும் முனைந்து செயல்பட்டுள்ளனர்.

இவ்விடுதலை நாள் விழா குறித்து சென்ற ஆண்டில் முதலமைசசர் விடுத்திருந்த வேண்டுகோளையும், அவ்வேண்டுகோளை அடிப்படையாக வைத்து இதே பகுதியில் நாம் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டிருந்ததையும் மீண்டும் இப்போது வெளியிடுகின்ருேம் :—

"உலக வரலாற்றில் சிறப்புவாய்ந்த இவ்விடுதலை நாளை, விடுதலைபெற்ற அந்த நாளிலேயே அறிஞர் அண்ணா அவர்கள் மகிழ்ந்து வரவேற்றதுடன், 'அரசியல் கட்சி வேற்றுமைகளை ஒதுக்கிவைத்துவிட்டு—இந்த நாட்டுக் குடிமக்கள் என்ற முறையில் அனைவரும்—விடுதலை நாளைத் திருநாளாகக் கொண்டாட வேண்டும்' என அழுத்தந்திருத்தமாகக் கருத்தறிவித்துள்ளார். அதே கருத்தை—'தமிழக முதலமைச்சர்' என்ற முறையில்—இந்த ஆண்டு சுதந்தர நாள் விழாவில் கலந்து கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள், கீழ்க் குறித்துள்ளபடி மீண்டும் வற்புறுத்தியுள்ளார் :—

"இங்கு வருவதற்கு இரண்டு மணி நேரத்திற்குமுன் நான், இராஜாஜியிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது, முன்னாள் ஆந்திர முதல்வரும் நாடாளுமன்ற அவைத் தலைவராக இருப்பவருமான திரு. சஞ்சீவி ரெட்டியும் உடனிருந்தார்.

"இந்த நாளாவது, அரசியல் கட்சிகளுக்கென்று விடாமல், நாட்டிற்கென்று பொதுவாக இருந்திருக்கக் கூடாதா?" என்ருர் இராஜாஜி; 'இருந்திருக்கலாம்' என்ருர் சஞ்சீவி ரெட்டி.

"உலகில் விடுதலைபெற்ற நாடுகளில் எல்லாம் கட்சி அடிப்படையில் விடுதலை நாள் கொண்டாடுவதில்லை."

அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினாலும்—அன்பர் ஆச்சாரியார் அவர்கள் விழைந்தாலும்—சஞ்சீவி ரெட்டியார் அவர்கள் வேண்டிக்கொண்டாலும்—மக்கள் அனைவராலும் பொது நாளாகக் கருதி, நாடு விடுதலையடைந்த புனிதமான நாளை விழா நாளாகக் கொண்டாடக்கூடிய மகத்தான காட்சியைக் காண, காங்கிரசுக் கட்சியினர் விரும்பமாட்டார்கள்! அப்படி ஒரு உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு மக்கள் அடியெடுத்து வைக்க முனைவதையும் காங்கிரசுக் கட்சியினர் தாங்கிக்கொள்ளமாட்டார்கள்! அந்த உயர்ந்த இலட்சியத்தை நோக்கி மக்கள், தம்மிச்சையாக நடைபோடத் துவங்குவதைத் தாங்கிக்கொள்ள முடியாது என்பதுடன், அதைத் திட்டமிட்டுக் கெடுப்பதை இன்றையக் காங்கிரசுக் கட்சியினர் மேற்கொள்ளத் தயங்கவுமாட்டார்கள்!

சுதந்தர நாள்---குடியரசு நாள் ஆகிய இரண்டு நாட்களும், அரசியல் கட்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, மக்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல் சகோதரப் பாசத்துடன்---மகிழ்ந்து விழாவாகக் கொண்டாடவேண்டிய நாளாகும். இத்தகு தனிசிறந்த முறையில், இந்த இரண்டு நாட்களையும் விழா நாட்களாகக் கொண்டாடக் காங்கிரசுக்காரர்கள் விரும்பாமைக்குக் காரணம் உண்டு.

தங்கள் கட்சியை வலிவுடையதாக ஆக்கிக்கொள்ளுவதற்கல்லவா, இவ்விரண்டு விழா நாட்களையும் காங்கிரசுக் கட்சியினர், இன்றுவரை திட்டமிட்டுப் பயன்படுத்திவந்திருக்கின்றனர்! இத்தகு மனப்பாங்குடையவர்கள் இவ்விரண்டு விழா நாட்களையும்---கட்சி அரசியல் கலப்பில்லாத பொது நாட்களாக ஆக்கி---'பொதுமக்களுடன் இணைந்து கொண்டாட வேண்டும்' என்ற சிறந்த கருத்தை ஏற்றுக்கொள்ள விரும்புவார்களா? அக்கருத்து நியாயமான கருத்து என்ருவது ஒப்புக் கொள்ளுவார்களா?"

—கா. க.

கொடுக்கல்-வாங்கல்!

கொள்வதும் -- கொடுப்பதும் இணை கோடுகளைப்போல் இருக்கும்வரையில் பிரச்சினையே இல்லை; ஏதாவது ஒன்று ஒரு வழிப் பாதையில் போகத் தலைப்பட்டாலும் 'பாதை' மாறும் -- 'பயணம்' தடைபடும்!

கொள்ளும் கரமும் கொடுக்கும் உள்ளமும் இருக்கும்வரையில், 'கொடுக்கல் -- வாங்கல்' இருந்துகொண்டுதான் இருக்கும்!

'வாங்கி'ருல்தான் முடியும் -- என்ற எண்ணமும், 'கொடுத்தால் முடித்துவிடலாம்' என்ற திடமும் இருக்கும்வரையில், கொடுக்கல் -- வாங்கலைப் பற்றிய தீமைகளை, உண்மையான நோக்கத்துடன் விவாதிக்க முடியும்?

அலை எப்போது ஓய்வது -- சமுத்திரத்தில்தான் எப்போது இறங்குவது? ஏதாவது ஒன்றைத்தான் முடிவு செய்ய முடியும்.

வெளியாரிடமிருந்து நிதியுதவி தேவைப்படுகிறது; ஆனால் அதைப் பெறுவதில் உள்ள 'பலா பலன்'களும் புரிகிறது!

இந்த இக்கட்டில் மாட்டிக் கொண்டு---மக்களவையில் ஒரு மசோதா---வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறது!

'கட்சிக்குப் பணம் வற்றிவிட்டதே' என சில தினங்களுக்கு முன் கையை விரித்திருக்கிருர்—காங்கிரசின் பொருளாளர் எஸ். கே. பாட்டில்!

"ஆமாம்; இதற்கு ஏதாவது ஒரு வழி பிறக்கவேண்டும். அலுவலகச் செலவுகளுக்கே இருப்பு நிதி போதவில்லை" என அங்கலாய்த்தார்—கட்சியின் தலைவர் நிஜலிங்கப்பா!

மருந்தின் அருவருப்பினை மனதில் கொண்டு சிறுவர்கள், தாயிடம், 'கொடு; நானே குடித்துவிடுகிறேன்' எனக் கூறக் கேட்டிருக்கிருேம்; அப்படிக் கொடுத்தாலோ, திரும்பவும் தயக்கம்தான்; கையும் எழாது---வாயும் அருந்தாது!

அதைப்போல், சென்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் போது எதிர்க் கட்சியைச் சேர்ந்த மது லிமாயி, அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நன்கொடை வழங்குவதைத் தடுக்கும் வகையில் சட்டம் செய்ய ஒரு மசோதா கொண்டுவந்தார்.

'சட்டம், தங்கள் கட்சியைத் தான் முதலில் பெரிதும் பாதிக்கும்' என உணர்ந்ததால் தானே என்னவோ—'இல்லை, இல்லை; அதுபோன்ற ஒரு மசோதாவினை ஆளும் கட்சியினராகிய நாங்களே அடுத்த கூட்டத் தொடரில் கொண்டு வருகிருேம்; எனவே, இப்போதைய மசோதாவினைக் கைவிடுக' எனக் காங்கிரசுக் கேட்டுக்கொண்டது!

'தாய் கொடுத்தால் கசக்கும்' எனத் தானே குடிப்பதாக வாங்கிக் கொண்ட மருந்தைக் குடிக்க மயங்கும் குழந்தையைப்போல், இக்கூட்டத் தொடரில் காங்கிரசே கொண்டுவந்த அந்த மசோதா, இன்னும் அந்தரத்தில்தான் தொங்கிக் கொண்டிருக்கிறது!

'கம்பெனிகளிடமிருந்து நன்கொடை வாங்குவது கூடாது' என்று ஒத்துக் கொண்டு பேசிய பல காங்கிரசு உறுப்பினர்கள், அமைச்சர்கள் -- பாராளுமன்ற கட்சிக் கூட்டத்தில் -- 'ஆமாம்; கம்பெனிகள் நன்கொடை இல்லாமல் கட்சி நடத்துவது எப்படி?' என்ற சந்தேகத்தை எழுப்பியிருப்பதன் விளைவாக, அமைச்சரவையும் அந்த மசோதாவை, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், இரண்டுங்கெட்டான் நிலையில் வைத்துக் கொண்டு அவதிப்படுகிறது!

'இந்த மசோதாவை முன்மொழிகிறேன்' என்று நாமே கூறிருல், கோபக் கணைகள் எங்கே நம்மீது திரும்பிவிடுமோ -- எனப் பயந்து, அமைச்சர் பக்ருதீன் அலி அகமது, 'நான் மட்டுமல்ல -- இந்த அமைச்சரவையே விரும்புவதனுல் தான் இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது' என்ற கூட்டுத் துணையுடன் அறிமுகப்படுத்தியிருப்பது, இந்தப் பிரச்சினையில் காங்கிரசுக் கட்சி எந்த அளவுக்கு இரட்டைப் போக்கினைக் கொண்டிருக்கிறது என்பதற்கு நல்ல அத்தாட்சியாகும்!

'கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்குவது' என்ற பிரச்சினைக்கு,

(3-ம் பக்கம் பார்க்க)

கொடுக்கல்--வாங்கல்:

ஒரு புள்ளிவிவரம்

1968 பிப்ரவரி மாதத்துடன் முடிந்த ஆறு ஆண்டுக் காலங்களில் இந்தியாவின் பல்வேறு அரசியல் கட்சிகள். கம்பெனிகளிடமிருந்து பெற்ற நிதி உதவிகளின் விவரம் :—

காங்கிரசு	ரூ.	2,05,22,778
சுதந்தரா	ரூ.	46,02,553
மாராட்டிர கோமண்டக கட்சி	ரூ.	2,75,500
முஸ்லீம் லீக்	ரூ.	1,79,379
ஜனசங்கம்	ரூ.	1,20,339
தி. மு. க.	ரூ.	925

கிருஷ்ணா, கோதாவரி நதி நீர்த் திட்டம் சிக்கலான பிரச்சினை

சோமசீலத்திலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் பரிசீலனை

சட்டமன்றத்தில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, ஆக. 17–

"கடலில் வீணாகச் சென்று விழும் கிருஷ்ணா, கோதாவரி ஆற்று நீரைத் தமிழ்நாட்டிற்கு---குறிப்பாகச் சென்னை நகருக்குக் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா? இது பற்றிப் பத்து ஆண்டுகளாகப் பேசப்பட்டு வந்தும், எதுவும் நடைபெறவில்லையே; இதைச் செய்வதில் என்ன சங்கடம் இருக்கிறது?" என்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் விளக்கிக் கூறியதாவது :–

"இந்த நதிகள்—மைசூர், ஆந்திரம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் ஓடுவதால், இது அவர்கள் சம்பந்தப்பட்ட மிகச் சிக்கலான பிரச்சினையாகும். அவர்கள்தான் இதுபற்றி முடிவு செய்யவேண்டியிருக்கிறது.

"சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக 1961-ல் மூன்று திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டன; நாகார்சுன சாகர் திட்டம் (ரூ. 54 கோடி செலவு); ஸ்ரீசைலம் திட்டம் (ரூ. 61 கோடி); துங்கபத்திரா (ரூ. 59 கோடி)—இந்த மூன்று திட்டங்களும் அதிகச் செலவாகும் என்று கருதிக் கைவிடப்பட்டது.

"அதற்குப் பதிலாக சோமசீலம் திட்டத்தின் மூலம் தண்ணீர் கொண்டுவந்தால் ரூ. 15 கோடி செலவாகும்; புழலேரியிலிருந்து 140 மைல் தூரத்தில்தான் அது இருக்கிறது; நாள்தோறும் 10 கோடி காலன் தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும். இத்திட்டத்தில் 500 மில்லியன் காலன் தண்ணீர் தேக்கி வைக்க முடியும்.

"இத்திட்டத்திற்கான மதிப்பீடுகளை ஆந்திர அரசு இன்னும் வரையவில்லை; 'திட்டச் செலவில் தமிழ்நாட்டின் பங்கு என்ன?' என்று கேட்டிருக்கிறார்கள்; இந்நிலையில்தான் இத்திட்டம் இருக்கிறது."

'காழ்ப்புணர்ச்சி' எனக் கூறியதற்குக் காரணம் உண்டா இல்லையா?

அறிக்கை வெளியானபின் தெரிந்துகொள்ளலாம்

முதலமைச்சர் தகவல்

சென்னை, ஆக. 17—

"'அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத் தீவைப்புகள் நடைபெறுகின்றன' என்று முதலமைச்சர் கூறியதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது; எந்த அடிப்படையில் அவர் இப்படிக் கூறினார்?"

என்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"தீவைப்புகள் சம்பந்தமாக விசாரித்த அதிகாரியின் அறிக்கை அரசுக்குக் கிடைத்திருக்கிறது; ஆனால், அது சம்பந்தமான வழக்கு ஒன்று உயர் நீதிமன்றத்தின் விசாரணையில் இருப்பதால் தான் அந்த அறிக்கை வெளியிடப்படவில்லை; அறிக்கை வெளியாகும்போது 'காழ்ப்புணர்ச்சி என்று சொல்லியதற்குக் காரணம் உண்டா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்."

'இன்றையச் சூழ்நிலையில் மாநில அளவில் திட்டக் குழு அவசியமில்லை'

மேலவையில் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 17—

"தமிழகத்திற்கென---மாநில அளவில் --- திட்டக் குழு அமைக்க மாநில அரசுக்கு எண்ணமில்லை"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில் கேள்வி நேரத்தின்போது கூறினார்.

"பெருந் திட்டங்களுக்கு வாய்ப்பு அதிகம் இல்லாத இன்றைய சூழ்நிலையில், மாநில அளவில் திட்டக் குழு அவசியமில்லை" என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழக திட்டக் குழு அமைக்கலாம் என்று இந்தியத் திட்டக் குழு உறுப்பினர் ஆர். வெங்கட்ராமன் யோசனை கூறியிருப்பதை சுட்டிக் காட்டியபோது முதலமைச்சர் கூறியதாவது :—

"அவர் யோசனை கூறியதில் தவறு ஒன்றுமில்லை; இன்றையச் சூழ்நிலையில் மாநிலத்துக்குத் திட்டக் குழு அவசியமென்று அரசு கருதவில்லை."

இளமுருகு பொற்செல்வி

மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

மூன்று மாதங்களுக்குமுன் கார் விபத்தில் படுகாயமடைந்து சென்னை அரசாங்க பெரிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று சில நாட்களுக்குமுன் இல்லம் திரும்பிய திரு. இளமுருகு பொற்செல்வி வலது கையின் தாங்கமுடியாத வலியாலும், அசைவு பெறாத காரணத்தாலும் மீண்டும் சென்னை பெரிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சென்னையில் கலைநிகழ்ச்சி நடத்த விரும்புவோர் கவனத்திற்கு :

பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு முருகு பாண்டியன் குழுவினர், செப். 16 முதல் 24-ம் நாள் வரையில், 'அண்ணாவின் ஆட்சி' எனும் கலை நிகழ்ச்சியை நடத்த சென்னையில் தங்குகின்றனர்.

நிகழ்ச்சியை சென்னையில் மட்டும் நடத்த விரும்பும் தோழர்கள் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்க :—

எம். ஆர். சந்திரன், செயலாளர், தி. மு. க. கிளை, 27-வது வட்டம், எண்-2, பெ. கோ. தோ. 2-வது சந்து, சென்னை-1.

கேரளத்துக்கு செலவிட்டது எவ்வளவு?

மக்களவையில் வாக்குவாதம்

புதுடில்லி, ஆக. 16—

வெளிநாட்டு உணவுத் துறை துணையமைச்சர் பி. ஆர். பகத் அவர்கட்கும்-கேரளக் கம்யூனிஸ்டு உறுப்பினர்களுக்குமிடையே மக்களவையில் காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றிருக்கிறது.

இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் ஈ. கே. நாயனார், 'காங்கிரசல்லாத அரசுகளை வீழ்த்தும் நோக்கத்துடன் அவைகளிடம் மத்திய அரசு பாரபட்சமாக நடந்து கொள்கிறது' என்று கூறியதைத் தொடர்ந்தே இந்த வாக்குவாதம் ஏற்பட்டது.

அமைச்சர் பகத், அரசியல் நோக்குடன், பொருளற்ற இக்குற்றச்சாட்டு கூறப்படுவதாகக் கூறினார்.

குற்றச்சாட்டுகள் கூறப்படுவதற்கு முன், உறுப்பினர்கள், உண்மையை அறிய முயற்சிக்க வேண்டுமென்றும், ஆனால் உறக்கப் பேசுவதனாலேயே உண்மையை நிலைநிறுத்தலாமென அவர்கள் கருதுகிறார்கள் என்றும் கூறினார்.

மத்திய அரசு கேரளத்திற்கு செய்யும் உதவியின் புள்ளிவிவரத்தையும் அவர் வெளியிட்டார்.

திரு. நாயனார், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலுமாக நாடு முழுவதுக்கும் ரூ. 2,800 கோடி பொதுத் துறையில் செலவிடப்பட்டிருக்கிறது என்றும், மக்கள் தொகை அடிப்படையில் கணக்கிட்டால், இத்தொகையில் ரூ. 101 கோடி கேரளத்தில் செலவிட்டிருக்கவேண்டுமென்றும், ஆனால் வெறும் ரூ. 27 கோடி மட்டுமே செலவிடப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

கொடுக்கல் -- வாங்கல்! [2-ம் பக்கத் :தொடர்ச்சி]

சட்டப் பிரச்சினையில் மட்டுமல்ல -- மத்திய நிர்வாகத்தில் உள்ள ஒரு கட்சி என்பதனால்கூட அல்ல -- 'இருபதாண்டுக் காலம் தொடர்ந்து இந்தியாவை ஆண்டதோர் முன்னேடும் அமைப்பு என்ற முறையிலும் காங்கிரசுக் கட்சிதான் இதற்கு முழுப் பொறுப்பை ஏற்கவேண்டும்.

அரசியல் கட்சிகள் அத்தனைக்கும் கம்பெனிகள் நன்கொடைகள் தந்துவிடுவதில்லை; அப்படியே தந்தாலும், 'தராதரம்' பார்த்துத்தான் தருகின்றன!

ஆளுகின்ற கட்சிக்குத்தான் கம்பெனிகளின் நன்கொடைக் கரம் அதிகமாக நீளும!

கடந்த பிப்ரவரி மாதத்துடன் முடிந்த ஆறுண்டுக் காலத்தில், இந்தியா முழுமைக்கும் அதிகமாக நன்கொடை பெற்றுள்ள ஒரே கட்சி காங்கிரசு மட்டும் தான்!

1962—63-ம் ஆண்டுக் காலத்தில், ரூ. 70.94 இலட்சமாக இருந்த காங்கிரசுக் கட்சியின் கம்பெனிகள் மூலம் வசூல், 1968 பிப்ரவரியுடன் முடிந்த ஆறுண்டுக் காலத்தில் ரூ. 2 கோடிக்கும் அதிகமாக வளர்ந்திருக்கிறது.

தூண்டில் புழு, மீனை இழுப்பதற்குத்தானே ஒழிய மீனுக்கு உணவாகத் தரபபடும் கருணைப் பிரசாதம் அல்ல!

கட்சி வளர வேண்டுமென்பதற்காக எந்தக் கம்பெனிகளும் கொடை வழங்குவதில்லை; 'குறிப்பிட்ட கட்சி ஆட்சிக்கு வரவேண்டும்; அல்லது, ஆட்சியில் இருப்பது நீடிக்க வேண்டும்' என்பதற்காகத் தான் நிதிகள் தருகின்றன!

அவ்வாறு தரப்படும் நிதிகள், 'கைமாறு' எதிர்பார்க்கப்படுபவை என்பது மட்டுமல்ல; அந்தக் 'கறுப்பு'ப் பணம், 'வெள்ளை'ப் பணமாக மாறுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பது மட்டுமல்ல; 'பொதுத் தேர்தலில் அப்பணம் கலந்து நீதியையும் நேர்மையையும் பாழடிக்கவும் உதவுகிறது என்பதனை தேர்தல் கமிஷனரே முன்னம் ஓர் முறை கூறியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

உதாரணமாக, 1967 பொதுத் தேர்தல்களில் அரசியல் கட்சிகள் செலவு செய்திருப்பதாகக் கருதப்படும் பத்து கோடி ரூபாயில் 3-கோடி ரூபாய்தான் 'வெள்ளை'ப் பணம்; மீதமுள்ள ரூ. 7-கோடியும், கணக்கில் வராதது! கம்பெனிகள் இருப்பில் இருந்த 'கறுப்பு'கள்---அத்தனையும்!

வெளியாகியுள்ள தகவல் ஒன்றின்படி பார்த்தால், பல கம்பெனிகள், தாங்கள் வாங்கிய கடன்களை—கடன்களுக்கான வட்டியைத் திருப்பித் தரமுடியாத நிலையில் இருந்தபோதிலும்கூட, கட்சிகளுக்கான நன்கொடைகளை மட்டும் கணிசமாகத் தந்திருப்பதாகத் தெரியவருகிறது!

காரணமில்லாமலா அக்கம்பெனிகளுக்கு இத்துணைக் 'கருணை' ஏற்பட்டிருக்கும்?

கல்கத்தா உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு ஒன்றில் குறிப்பிட்டிருப்பதுபோல், ஆட்சியிலுள்ள கட்சிக்குக் 'கையூட்டு'ம், 'இலஞ்சமு'ம் தந்து, காரியத்தினை முடித்துக் கொள்ள இப்போதுள்ள சட்ட திட்டங்கள் முறைப்படி அனுமதி தருவதாக இருப்பதுதான், எல்லாவற்றுக்குமான அடிப்படைக் கோளாறு!

இதனை விரைந்து சென்றுதடுப்பதற்குத்தான் காங்கிரசுக்கட்சி, இத்தனைத் தயக்கமும் தாமதமும் காட்டுகிறது!

'கூழுக்கும் ஆசை -- மீசைக்கும் விருப்பம்' என்பதுபோல், தடைச் சட்டம் பிறப்பித்தால், முதலில் அது, தங்களுடைய கட்சியைத்தானே பெருமளவுக்குப் பாதிக்கும் எனக் காங்கிரசு அஞ்சுகிறது!

அதற்காக, 'சட்டம் கொண்டு வருவதினின்றும் இனி பின் வாங்கினாலோ, எதிர்க் கட்சிகளின் விமர்சனங்களுக்கு இலக்காக நேரிடுமே' என்ற அச்சமும் அதற்கு இருக்கிறது!

இரண்டில் ஏதாவது ஒன்றைத் தான் முடிவு செய்ய முடியும்; ஆனால் காங்கிரசோ, 'இரண்டிலும் நல்ல பிள்ளையாக இருக்க முடியுமா' என எதிர் பார்க்கிறது!

அதன் பலனாகத்தான், அந்த மசோதா, கட்சிக்குள்ளேயே இன்னும் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது!

கோடீசுவரர்களிடமிருந்து கோடிக்கணக்கில் வரி பாக்கிகளை இன்னும் வசூல் செய்ய முடியாத நிலையிலுள்ள நிதி இலாகாவுக்குப் பொறுப்பான துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய், இதற்கு ஒரு சப்பைக்கட்டும் கட்டியிருக்கிறார்—

"கம்பெனிகள், கட்சிகளுக்கு நிதி தரக்கூடாது என்று சட்டமே வந்தாலும், மறைமுகமாக அது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்; சட்டம் அதனை ஒன்றும் செய்ய முடியாது"

என்று சட்டத்துக்குப் பொறுப்பாக உயர்ந்த இடத்திலுள்ள அவரே கூறியிருப்பது, இந்த மசோதா கொண்டுவருவதனை அதிருப்தியடையச் செய்வதாக இருக்கிறது என்பது மட்டுமல்ல -- அப்படியே சட்டம் வந்தாலும், அதற்கு 'ஓட்டை'யும் இருக்கிறது என்பதற்கான சூசக அறிவிப்பையும் உணர்த்திக் காட்டுவதாக இருக்கிறது.

எதிர்க் கட்சிகளுக்கு மட்டுமல்ல -- மற்றைய மாநிலங்களிலுள்ள காங்கிரசல்லாத ஆளுங் கட்சிகளுக்கும் இந்தப் பிரச்சினையில் ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டிய காங்கிரசு, இந்த அளவுக்கு இரட்டை மனப்பான்மையைக் காட்டுவது, 1960-ம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள ஒரு கண்டிப்பு நிறைந்த வாசகத்தினைத்தான் நினைவுபடுத்துவதாக இருக்கிறது :—

"கம்பெனிகள், அரசியல் கட்சிகளுக்குத் தரும் நன்கொடைகளுக்கு ஒரு கட்டுப்பாடு இல்லையேல், ஆபிரகாம் லிங்கன் கூறிய — 'மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் மக்களாட்சி' என்ற நிலை மறைந்து, 'தொழிலதிபர்களால் தொழிலதிபர்களுக்காக நடத்தப்படும் ஒருவகை மக்களாட்சி' என்ற நிலைதான் தோன்றும்!"

—எஸ். ஆர்.

வெள்ளிப் பழத் தட்டை எடுத்துச்சென்றது உண்மைதானும்!

புதுடில்லி, ஆக. 16—

"பிரேம் கிஷன் என்னும் ஐ.சி.எஸ். அதிகாரி ஒருவர், ஐரோப்பாவின் ஓரிடத்திலிருந்து இன்னோர்இடத்திற்கு மாற்றலாகிப் போகும்போது, தவறுதலாக வெள்ளிப் பழத் தட்டு ஒன்றைத் தம்முடன் எடுத்துச் சென்றது உண்மைதான்"

என்று மக்களவையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூறியிருக்கிறார்.

இத்தவறு சில நாட்களுக்குள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாகவும், உடன், சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்தத் தட்டு திருப்பித் தரப்பட்டுவிட்டதாகவும் அவர் கூறினார்.

இப்பொழுது ஐ. நா. அவையில் ஊழியம் புரியும் அவரை, எந்த அமைச்சகமும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று கூறப்படுவதையும் தலைமையமைச்சர் மறுத்தார்.

"பிரேம் கிஷன் மத்திய அரசில் வீட்டு வசதித் துறைச் செயலாளராக இருந்தபோது, தமது பதவியின் செல்வாக்கால் இரு வீடுகளைக் கட்டி மாதமொன்றுக்கு ரூ. 5,000 வாடகை பெற்றுக்கொண்டு வருவது உண்மைதானா?"

என்று கேட்கப்பட்டபோது தலைமையமைச்சர் கூறியதாவது :–

"பிரேம் கிஷன், ஒரு வீடு கட்டியிருப்பதையும், ரூ. 5,000 மாத வாடகை பெற்று வருவதையும் அரசு அறியும்; ஆனால், தமது பதவியை அவர் தவறாகப் பயன்படுத்தவில்லை."

தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு கழகத் தோழர்கள் ஆறுதல்

14—8—68 காலை சுமார் 9-30 மணியளவில், சென்னை—புதுவண்ணாரப்பேட்டை புச்சையம்மாள் தெருவில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக சுமார் 120 குடிசை வீடுகள் எரிந்து சாம்பலாகிவிட்டன. இதில் சுமார் 65 அரிசனக் குடும்பங்களும், சுமார் 45 சலவைத் தொழிலாளர்கள் குடும்பங்களும் பாதிக்கப்பட்டன. ஏராளமான பொருட்சேதம் ஏற்பட்டன.

செய்தியறிந்ததும், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர். கண்ணனும், கழகத் தோழர்களும் தீ பிடித்த இடங்களைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து ஆவன செய்வதாகக் கூறினர்.

தீயை அணைப்பதில் கழகத் தோழர்களும் உடனிருந்து உதவி செய்தனர்.

அணு அணுவாகத் தன்மைச் சிதைத்துக்கொண்ட தியாகியை நினைவிலிறுத்துவோம்'

வலிவும் உறுதியும் பேரெழுச்சியும் பெற்றிருந்தவரின் எண்ணம் பெருமிதத்துடன் நிறைவேறுகிறது

'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானம்-முதலமைச்சர் அண்ணா கனிவுரை

சென்னை, ஆக. 17—

"தமிழ்நாடு பெயர் மாற்றத்தின் அவசியத்தை உணர்த்த ஆதாரங்கள் தேடி—சான்றுகளைக் காட்டி நான் வாதாட வேண்டிய நிலையில் இல்லை; இத்தேவை ஒரு காலத்தில் இருந்திருக்கலாம்; இன்றைய நிலையில் அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த மகிழ்ச்சிகரமான நேரத்தில் கடந்ததை மறப்போம்.

"இச்சமயத்தில் ஒரே ஒரு நெஞ்சுருக்கும் சம்பவத்தை எடுத்துரைக்கிறேன். 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து விருதுநகரில் சங்கரலிங்கனார் உண்ணாநோன்பு மேற்கொண்டு அணு அணுவாகத் தம்மைத் தாமே சிதைத்துக்கொண்டார்; அவர் இறப்பதற்கு 15 நாட்களுக்கு முன் நான் அவரைச் சந்தித்து 'பெயர் மாற்றத்துக்காகத் தி.மு. கழகம் பாடுபடுகிறது; உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள்' என்று கேட்டுக்கொண்டேன்; 'அதற்கான அரசியல் வலிவு உங்களுக்கில்லை; எனவே உண்ணாநோன்பைக் கைவிடும்படிச் சொல்லாதீர்கள்' என்று அவர் சொல்லிவிட்டார்; அந்த அளவுக்கு வலிவும் உறுதியும் பேரெழுச்சியும் பெற்றிருந்த அந்தத் தியாகியின் நினைவுக்கு இந்நேரத்தில் அஞ்சலி செலுத்துவோமாக!"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டப் பேரவையில், "சென்னை மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கை செய்யும் நாடாளுமன்ற மசோதாவை ஏற்கவேண்டும்" என்ற தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் உருக்கமுடன் குறிப்பிட்டார்.

இந்த மசோதாவில், 'தமிழ்நாட்' (Tamil Nad) என்ற சொற்கள் எங்கெங்கு வருகின்றனவோ அங்கெல்லாம் 'தமிழ்நாடு' (Tamil Nadu) என்ற சொற்களை அமைக்கவேண்டும் என்ற திருத்தத்துடன் இந்த மசோதாவை ஏற்க சட்டப்பேரவை ஒருமனதாக ஒப்புதல் அளித்தது.

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவிருக்கும் 'தமிழ்நாடு' பெயர் மாற்ற மசோதாவுக்கு, தமிழ்நாடு சட்டப் பேரவையும், மேலவையும் முழுமனதான ஒப்புதலை அளித்தன.

"18 திங்களுக்குமுன் இச்சட்ட மன்றத்தில் நிறைவேறிய தீர்மானத்தை மத்திய அரசு ஏற்று இம்மசோதா வந்திருப்பது, சனநாயகத்திற்குக் கிடைத்துள்ள வெற்றியாகும்.

"'காங்கிரசின்மீது தி. மு. க. பெற்ற வெற்றி' என்றால், மிகைபடக் கூறுவதாகாது; 'எதேச்சாதிகாரத்தின்மீது சனநாயகம் பெற்ற வெற்றி' என்றாலும், குறைத்துக்கொள்வதாகாது"

என்று சட்டப் பேரவையில், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையின் விவாதத்தின் இறுதியில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், தம்முடைய தீர்மானத்திற்கு ஒருமனதான ஆதரவு தெரிவித்த உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு பேசுகையில், 'ழ'கரத்தின் பெருமை பற்றிக் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு 'ழ'கரம் இப்பெயரில் இடம் பெறாதது எனக்கும் வருத்தத்தைக் கொடுக்கிறது. இதில் உள்ள வசதிக்குறைவை மனதில் கொண்டுதான் இதை வலியுறுத்தாதுவிடுகிறோம்.

'ழ'கரத்திற்குப் பதிலாக வேறு எழுத்தைப் பயன்படுத்துவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்; என்னதான் முயற்சி செய்து கற்றுக்கொடுத்தாலும் வட இந்தியர்களுக்கு 'ழ'கர உச்சரிப்பு வரவில்லை.

'கழகம்' என்று சொல்லிக் கொடுத்தால் 'கஜகம்' என்றுதான் உச்சரிக்கிறார்கள்; இந்திய அரசில் உள்ள மிகப்பெரிய தலைவர்களில் ஒருவர், 'ழ'கரத்தைக் கொண்டுவந்து தொல்லை கொடுத்து விடாதீர்கள் என்று என்னிடமே கூறினார்.

அவர்களின் வசதிக்குறைவையும், ஆங்கிலத்தில் 'ழ'கரத்திற்குச் சரியான முறையில் எழுத முடியாது என்பதையும் கவனிக்கவேண்டும்.

தமிழ்மொழியிலுள்ள ஒரு எழுத்துக்கு வேறு மொழியிலுள்ள பல எழுத்துக்களைப் போட்டாலும் 'ழ'கரத்திற்கு ஈடாகாது.

இந்த 'ழ'கரம் நம்மோடு பிறந்தது—வளருவது—பிறர் நாவிலே வராதது!

அரசியலமைப்புச் சட்டத்தில் 'சென்னை ராஜ்யம்' என்றுள்ளது; இனி, 'தமிழ்நாடு' ஆகும் என்ற மனநிறைவோடு இதனை நிறைவேற்றுவோம்."

மேலவையில்:

சட்டமன்ற மேலவையிலும் முதலமைச்சர் அண்ணா அவர்கள், மசோதாவை ஏற்குமாறு கோரி தீர்மானம் கொண்டுவந்தார்.

உறுப்பினர்கள் பலரும் தீர்மானத்தை வரவேற்றும் பாராட்டியும் பேசினர்.

"அண்ணாவின் ஆட்சியில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு நிறைவேறுவது பெருமகிழ்ச்சிக்குரியது; உண்ணாநோன்பிருந்து உயிர்த் தியாகம் செய்த சங்கரலிங்கனாரது ஆத்மா அமைதி பெறும்—ஆறுதலடையும்"

என்று சுதந்தரா உறுப்பினர் சா. கணேசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

விவாதத்துக்குப் பதிலளித்து முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தத் தீர்மானம்போல ஆண்டுக்கு ஓரிரு தீர்மானங்கள் வருவது நம் சனநாயகப் பண்பு வளர துணைசெய்யும்.

"தமிழ் ஒன்றுதான் நம்மையெல்லாம் ஒன்றுபடுத்தி இருக்கிறது; நல்ல உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது"

ஒசூர் வட்ட தி. மு. க. தேர்தல்

தருமபுரி மாவட்டம் ஒசூர் வட்ட தி. மு. கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவைத் தலைவர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், மாவட்டப் பிரதிநிதிகள் இரண்டுபேர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் 25-8-68 காலை 10-மணிக்கு ஒசூர் பயணிகள் விடுதியில் நடைபெறும்.

மேற்காணும் பொறுப்புகளுக்கு மேலும் வேட்பு மனு அனுப்ப விரும்பும் தோழர்கள் முறைப்படி 22-8-68 மாலை 6-மணிக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்ப வேண்டுமென்று அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

ஒசூர் வட்டப் பிரதிநிதிகட்கு

அறிவிப்பு

ஒசூர் வட்ட தி. மு. கழகத்திற்குத் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்புகளுக்காக 25-8-68 ஆம் நாள் காலை 10-மணிக்கு ஒசூர் பயணிகள் விடுதியில் நடைபெறவிருக்கும் தேர்தலின்போது, ஒசூர் வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் ஏற்கனவே தங்கள் தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் பிரதிநிதிச் சீட்டைக் காண்பித்தே தேர்தல் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்பதும், 25-ஆம் நாள் தேர்தலுக்காகத் தனியாகப் பிரதிநிதிச் சீட்டுகள் அனுப்பப்படவில்லை என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நாமக்கல் வட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி 20—8—68 செவ்வாய் காலை 10 மணிக்கு நாமக்கல் பி எஸ். ஆர். திடலில் நாமக்கல் வட்ட தி. மு. க. தேர்தல் நடைபெறும். தோழர் ஓ. எஸ். பாலசுந்தரம், தேர்தல் ஆணையாளராகப் பொறுப்பேற்றுத் தேர்தலை நடத்தி வைப்பார்.

11—8—68 அன்று நடைபெற விருந்த வட்டக் கழகத் தேர்தலுக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் அடையாளச் சீட்டு களையே கொண்டுவர வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

20--8--68

குடியேற்றம்

24-வது வட்ட வள்ளுவர் மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு காமாட்சியம்மன்பேட்டை வள்ளுவர் மன்றத் திடலில்; தலைவர்: என். முனியப்பன்; பேசுவோர்: சு. நாவலர் நம்பி, பி. செயராமன் எம்.எல்.ஏ., ஏ. க. துரைசாமி, ஏ. வி. துரைசாமி, எல்.எம்.எஸ். தட்சணாமூர்த்தி, செ. மா. அரங்கசாமி, கே. ஜி. முனியப்பன், மற்றும் பலர்.

21--8--68

சென்னை 27-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு பெருமாள் கோயில் தோட்டம் 1-வது சந்தில்; தலைவர்: எம். ஆர். சந்திரன்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., சட்டமன்ற உறுப்பினர்கள் எம். ஆர். கண்ணன், ஓ. பி. இராமன், கே.எம். மேத்தா, பீர் முகம்மது, மற்றும் திருமதி ஜாய் செயராமன்.

திருவொற்றியூர் (சென்னை)

8-வது வட்ட தி. மு. க. உட்கிளை திறப்பு விழா; மாலை 6-30 மணிக்கு தாங்கல் பஸ் நிலையம் அருகில்; தலைவர்: எஸ். ஏ. கிருட்டினன்; பேசுவோர்: ஈரோடு சின்னச்சாமி எம்.எல்.ஏ. பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., எஸ். பெ. வெங்கட்ராமன், வை. பார்த்தசாரதி, இரெ. வாசுதேவன், மற்றும் பலர்.

மன்னை

நகர தி. மு. க. — வள்ளுவர் மன்றம் ஆகியவை சார்பில் மாலை 6-மணிக்கு கீழ பிதமசாலவர் தெருவில்; தலைவர் ஆ. கண்ணையன்; பேசுவோர்: ஏ. பி. மனோன்மணி, ப. நாராயணசாமி, சு. நாராயணசாமி, ஜெ. பால கிருட்டினன் எம்.சி. இரா. தென்னவன், மு. தில்லைக்கண்ணு, வீ. இராமையன், மற்றும் பலர்.

அமைச்சர் மா. முத்துசாமி—மாநகராட்சித் தூதுக்குழுவினர்

டெல்லி திரும்பினர்—நாளை சென்னை வருகை

சென்னை, ஆக. 19—

இரஷ்யாவில் நகராட்சிகளின் நிர்வாகம் நடைபெறும் முறைகள் பற்றி நேரில் கண்டறிவதற்காக தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி தலைமையில் சென்ற மாநகராட்சித் தூதுக் குழுவினர்—இரஷ்யா செல்லும் வழியில் பாரிஸ், இலண்டன், ஆம்ஸ்டர்டாம், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கும் சென்று விட்டு—இரஷ்யாவிலிருந்து இன்று காலை புதுடில்லி வந்து சேர்ந்தனர்; நாடாளுமன்றக் கழக உறுப்பினர்கள், விமான நிலையத்தில் குழுவினரை வரவேற்றனர்.

அமைச்சர் முத்துசாமி அவர்களும்—மாநகராட்சித் தூதுக்குழுவினரும் நாளை (செவ்வாய்) காலை புதுடில்லியிலிருந்து விமானம்மூலம் புறப்பட்டு பிற்பகல் 1-மணியளவில் மீனம்பாக்கம் விமான நிலையம் வந்து சேருவர்.

விமான நிலையத்தில், அமைச்சர் முத்துசாமி அவர்கட்கும்—குழுவினருக்கும் சிறப்புமிக்க வரவேற்பு அளிக்கப்படும்.

விழுப்புரம் வட்ட தி.மு.க. தேர்தல்

14—8—68 'நம் நாடு' இதழில், விழுப்புரம் வட்ட தி.மு.க. தேர்தல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிவிப்பினைக் கீழ்க்கண்டவாறு திருத்தி அறிவிக்கப்படுகிறது:—

"தெ. ஆ. மாவட்டம் விழுப்புரம் வட்ட தி. மு. கழகத்தின் அவைத் தலைவர் பொறுப்பு தவிர, மற்ற எல்லாப் பொறுப்புகளுக்குமான தேர்தல்கள், 1—9—68 ஞாயிறு காலை 10 மணிக்கு, விழுப்புரம் முனிசிபல் பயணியர் விடுதியில் நடைபெறும்; தேர்தல் ஆணையாளர்: சா. கணேசன் எம்.சி.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

வருந்துகிறோம்

சென்னை, ஆக. 19—

கழக சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆலடி அருணா அவர்களின் பாட்டனார் எஸ். சந்தனகுமார பாண்டியன் இன்று காலை 7-மணிக்கு இயற்கையெய்தினர். திரு. சந்தன குமாரபாண்டியன் அவர்கள்தான் வட சென்னையில் முதன் முதலாகத் தனியார் பள்ளியை நிறுவியவராவார். ஆயிரம் மாணவர்கள் பயின்றுவரும் உயர் துவக்கப் பள்ளியை, நடத்தி வந்தவராவார்; திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் இவருடைய கல்விப் பணியைப் பாராட்டி முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள், அவரது 75-வது வயதில் பொன்னாடை போர்த்தினர்.

'வட சென்னையின், கல்வித் தந்தை' என்று அவர் அழைக்கப்பட்டவராவார். நமது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

எஸ். ஜே. சாதிக் பாட்சா
பொதுநலத் துறை அமைச்சர்

சென்னை
1—8—68

திருமண விழா

அன்புடையீர் வணக்கம்.

எனக்கும்—மதுராந்தகம் திரு. முத்தாஹிருத்தீன் அவர்களின் புதல்வி செல்வி: சர்புந்நிசா பேகத்துக்கும் 22—8—68 வியாழன் காலை 8-மணியளவில் ஆபட்ஸ்பரி மண்டபத்தில் நடைபெறும் திருமண விழாவிற்கும், மாலை 5-மணிக்கு தமிழக முதலமைச்சர்

பேரறிஞர் அண்ணா

அவர்கள் தலைமையில் நிகழவிருக்கும் பாராட்டு விழாவுக்கும் தாங்கள் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்புள்ள,
எஸ். ஜே. சாதிக் பாட்சா

குறிப்பு:—பரிசுகள் வழங்காதிருக்க வேண்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிவகம் அச்சகத்தில் (24, ஆரியப்பராயன் செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பட்டது.